REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(11—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை :	மக்கள் சபை :
7	1

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை :	மக்கள் சபை :
6,72,296	2,35,765

மலர் 4] சென்னை: மாசி 28உ திங்கள் (11—3—57) ★ ★ வெளியூர்: மாசி 29உ செவ்வாய் (12—3—57) [இதழ் 233

ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் வெற்றி!

ஆயிரம்விளக்குத் தொகுதி மக்கள் 'ஏக இந்தியா'க்களுக்கு தந்த பாடம்

நேரிடைப் போட்டியில் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுற்றார்

தி. மு. கழக அபேட்சகர்களுக்கு வெற்றி தேடித் தந்த பெருமை பெறும் வாக்காளர்களில், சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதி வாக்காளர்களும் இடம்பெறுகின்றனர்.

அரும் பாடுபட்டு தி. மு. கழகம் ஊட்டி வரும் ஜனநாயக உணர்வையும் விடுதலை வேட்கையையும் தாங்கள் குறைவறப் பெற்றிருக்கின்றனர் என்பதை, ஆயிரம்விளக்குத் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. கழக அபேட்சகரான தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு மகத்தான வெற்றி தேடித் தந்து வெளிக்காட்டியுள்ளனர்.

தோழர் ஆசைத்தம்பி அவர்களுடன் நேரிடையாகப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரான கே. வெங்கிடசாமி அவர்கள் படுதோல்வியுற்றார்.

தோழர் வெங்கிடசாமி நாயுடு அவர்கள் ஆச்சாரியார் மந்திரி சபையில் மடாலய மந்திரியாயிருந்தவர்; பழம்பெரும் காங்கிரஸ்காரர்; பெரும் பண முதலை!

இவருக்கு ஆதரவாகவும் தோழர் ஆசைத்தம்பிக்கு எதிராகவும், எல்லா 'ஏக இந்தியா'க்களும் வேலை செய்து தோல்வி கண்டனர்!

தோழர் ஆசைத்தம்பி அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரைவிட 2,715 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிவாகை சூடினர்.

வாக்கு விபரம் :

ஏ. வி. பி. ஆசைத்தம்பி	(தி. மு. க.)	17,632
கே. வெங்கிடசாமி நாயுடு	(காங்)	14,917
செல்லாதவை		69

தோழர் க. அன்பழகன் வெற்றிபெற்றார்

சென்னை, மார்ச் 11—

சென்னை எழும்பூர் சட்டசபைத் தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் தோழர் க. அன்பழகன் அவர்கள் நிச்சயம் வெற்றிபெறுவார் என்பதை பாராளுமன்ற வாக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு தெரியமுடிந்தது.

தோழர் க. அன்பழகன் அவர்கள் தம்மை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர் இராதாகிருஷ்ணன் அவர்களைவிட 3,764 வாக்குகள் அதிகம் பெற்று மகத்தான வெற்றி பெற்றுள்ளார்.

தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியில் உள்ளடங்கிய எழும்பூர் தொகுதியில் பதிவான வாக்குகள் எண்ணிக்கையின்போது, தி. மு. கழக அபேட்சகரான தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், மத்திய சர்க்கார் நிதி மந்திரியான டி. டி. கிருஷ்ணமாச்சாரியைவிட 2,820 வாக்குகள் அதிகம் பெற்றிருந்தார். எழும்பூர் தொகுதியில் மட்டும், வாக்கெடுப்பின்போது தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு 16,477 வாக்குகளும் டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு 13,657 வாக்குகளும் கிடைத்திருந்தன.

(முழு விவரம் நாளை)

பஞ்சாப் திட்ட மந்திரி தோல்வி!

பஞ்சாப் சட்டசபைத் தொகுதி ஒன்றில் போட்டியிட்ட பஞ்சாப் திட்ட மந்திரி பிரிஸ்பான் சிங், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகர் மகேந்திர சிங்கினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

10,107 அதிகமான வாக்குகள் பெற்று சுயேச்சை அபேட்சகர் திட்ட அமைச்சரை வீழ்த்தியுள்ளார்.

தோழர் பி. பாலசுப்பிரமணியம் பெற்ற பெருமைக்குரிய வாக்குகள்!

கம்யூனிஸ்டுகள் தீவிரமாக ஆதரித்த எச். டி. ராஜா ஜாமீன் பறிகொடுத்தார்

குறுகிய பெரும்பான்மையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி வெற்றி

சென்னை, மார்ச் 11—

தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியில், தி. மு. கழக அபேட்சகராக நிறுத்தப்பட்ட திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் 71,284 வாக்குகள் பெற்றும், தோல்வியடைந்துள்ளார்.

இவரை எதிர்த்து, காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட டி. டி. கிருஷ்ணமாச்சாரி 81,390 ஓட்டுகள்—அதாவது, பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பெற்றதைவிட 10,116 ஓட்டுகள் மட்டுமே அதிகம் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

இதே தொகுதியில் போட்டியிட்ட திரு. எச். டி. ராஜா அவர்கள் 24,516 வாக்குகள் மட்டும் பெற்று படுதோல்வியுற்று ஜாமீன் பறிகொடுத்தார்.

திரு. எச். டி. ராஜா அவர்கள் கம்யூனிஸ்டு, பி. சோ. தமிழரசுக் கழகம் ஆகிய 'ஏக இந்தியா'க்களால் ஆதரிக்கப்பட்டார்!

இவருக்காக, கம்யூனிஸ்டுக் கட்சியினர் வெகு தீவிரமாக வேலை செய்தனர்!

'திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி வெற்றி பெற்றாலும் பரவாயில்லை; தி. மு. கழக அபேட்சகரான பி. பாலசுப்பிரமணியம் வெற்றி பெறக் கூடாது,' என்ற நோக்கத்துடனேயே எச். டி. ராஜா தேர்தலில் ஈடுபட்டதாகவும், அதற்காகவே கம்யூனிஸ்டு தலைவர்கள்—எச். டி. ராஜா ஒரு பெரும் பண முதலை என்பதையும், இன்ஷ்யூரன்ஸ் தொழில் தேசியமயமாவதை எதிர்த்த சுயநலப் பிற்போக்குவாதி என்பதையும் பொருட்படுத்தாமல் அவரை ஆதரித்துத் தீவிரமாக வேலை செய்தனர் என்றும் எச். டி. ராஜாவுக்காக தேர்தல் வேலை செய்த ஒருவர் நமது நிருபரிடம் கூறினார்.

எச். டி. ராஜாவைக்கொண்டு திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை வெற்றி பெறச் செய்துவிட்டதில் 'அதிதீவிரவாதி'களான—'மக்கள் புதல்வர்'களான கம்யூனிஸ்டு கட்சியினருக்குத்தான் அதிக

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை சட்டசபைத் தேர்தல்

கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 11—

சென்னை சட்டசபைக்கு இதுவரையில் 101 இடங்களுக்குமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு :—

தி. மு. கழகம்	6
பி. சோ.	1
சுயேச்சை	8
கம்யூனிஸ்டு	2
பார்வர்டு பிளாக்	2
கா. சீ. க.	8
காங்கிரஸ்	74

கல்வி இலாகா அமைச்சர் தோல்வி!

பம்பாய் மாநில கல்வி இலாகா மந்திரி இந்துமதி என்பார் சட்டசபைத் தொகுதி ஒன்றில் தன்னை எதிர்த்து நின்ற அபேட்சகர் ஒருவரால் 11,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

வ. ஆ. மாவட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் நடராசன்

சென்னை, மார்ச் 11—

தமிழகத் தேர்தலில் இறுதிக்கட்டமான இன்று, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பல பகுதிகளில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தமது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, தேர்தல் நிலைமைகளைக் கண்காணித்து வருகிறார்.

இன்று பகல் 12 மணிவரையிலும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் திமிரி, ஆற்காடு, இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய முக்கியப் பகுதிகளுக்குச் சென்று, ஆங்காங்குள்ள கழகத் தோழர்களுக்கு உற்சாகம் ஊட்டியுள்ளார். அங்கெல்லாம் கழகத் தோழர்கள் அமைதியான முறையில் சுறுசுறுப்புடன் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இன்று பிற்பகல், மீண்டும் துணைப் பொதுச்செயலாளர் அவர்கள் மற்ற பல இடங்களுக்கும் செல்ல இருக்கிறார்.

காங்கிரஸ் அபேட்சகர் பெற்ற அனுபவம்

பஞ்சாப் சட்டசபைத் தொகுதி ஒன்றில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற தனது கணவரை அதே தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக நின்று அவரது மனைவி தோற்கடித்துள்ளார்.

ஏற்கனவே சட்டசபை உறுப்பினராயிருந்தவரான அப்பெண்மணியின் கணவர், 2,672 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தப்பட்டதாகச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

திருமதி. ஜெகதீஸ் கௌர் என்ற அம்மாது தனது கணவரின் சகோதரரான பரீத்கோட் இராசாவை எதிர்த்து மற்றொரு தொகுதியிலும்போட்டியிடுகிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 11—3—57 திங்கள்

பைத்தியக்காரத்தனம்!

'தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளவேண்டும்; ஒரு நாட்டு மக்கள் பிறரால் ஆளப்படும் அடிமை நிலை மாறவேண்டும்; தங்களை உயர்த்திக்கொள்ளவோ தாழ்த்திக்கொள்ளவோ தங்களுக்கு மட்டுமே அதிகாரம் இருக்கவேண்டும்', என்ற இயற்கையான விடுதலை வேட்கைக்கு நியாயங்களைத்தேடி அலைந்து நிலைநாட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஒவ்வொரு மக்கள் கூட்டத்திற்கும் இந்தச் சுதந்திரம் பிறப்புரிமையாகும் என்பது, இனி எவரும் சொல்லித் தந்து ஒருவர் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம் அல்ல!

உலகின் எல்ல மூலைகளிலும் இன்று, இந்த விடுதலைக்காகப் போராடுவதைத்தான் உலகில் கிடைக்கும் புகழில் எல்லாம்—பெருமைகளில் எல்லாம் தலையாய புகழாகக் கருதுகிறார்கள்; விடுதலையோடு கூடிய வாழ்வைத்தான், பரிபூரணமான வாழ்வு என்று கொள்கிறார்கள்.

இந்தப் பரிபூரணமான வாழ்வைப் பெறுவதற்காக மனித இனம், ஆதிக்கக்காரர்களுக்கு எதிராக நடத்திய போராட்டங்கள்தான் உலக வரலாற்றின் பெருமைமிகு அத்தியாயங்களை அடைத்துக் கொண்டிருக்கின்றன; சுருங்கக்கூறின், மனித இன் வளர்ச்சியின் வரலாறே இந்த விடுதலைப்போராட்ட வரலாறுதான். இன்னும் பூர்த்தியாகாத இந்த வரலாற்றில், தங்கள் தங்கள் பெயரையும் பதிவு செய்துகொள்ள 'இன்று, உலகில் அடிமை நிலையில் இருக்கிறோம்' என்ற உணர்வுபெற்ற அத்தனை மக்கள் கூட்டமும் துடித்து நிற்பதைக் காண்கிறோம்.

தங்கள் சுதந்திரத்தைப் பெற எழுச்சி கொண்டுவிட்ட மக்கள் கூட்டத்தின் வேட்கையை—அதன் விளைவான போராட்டங்களை—உலகின் எந்தச் சக்தியாலும் அடக்கிவிட முடியாது என்ற உண்மையை விடுதலை வரலாறு தன்னிடமுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களால் சொல்லிக் கொடுத்த பின்னும், உலகில் தோன்றும் ஆதிக்கக்காரர்கள், அந்த பாடத்தைக் கற்றுக்கொள்ளத் தவறிவிட்டிருக்கிறார்கள். 'நம்மிடம் இருந்தவரையில் இலாபம்,' என்ற பேராசைப் பேய் அவர்களைப் பிடித்தாட்டுகிறது. இந்தப் பேயாட்டம் ஆடுபவர்களில் பிரிட்டிஷார்தான் கெட்டிக்காரர்கள் எனலாம்; ஏனெனில், ஒரு நாட்டின் சுதந்திரக் கோரிக்கையை நிர்ப்பந்தம் காரணமாக அங்கீகரிக்கும் போதே, தாங்கள் அடிமை கொண்டுள்ள மற்றொரு நாட்டிற்கு விடுதலை வழங்க சாக்குப் போக்குக் கூறுவதில் வல்லவர்களாயிருக்கின்றனர்.

ஆப்பிரிக்காவில் கனா உருவாக சம்மதித்துவிட்ட பிரிட்டன்—மலேயாவின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பணிய இசைந்துவிட்ட பிரிட்டன், சிங்கப்பூர் விடுதலைக் கோரிக்கையை ஏற்க மறுக்கும் போக்கிற்கு, 'இருந்தவரையில் இலாபம்,' என்ற பேராசை தவிர வேறு என்ன காரணம் கூறமுடியும்?

சிங்கப்பூர் மக்கள் தங்களது சுதந்திரக் கோரிக்கையைப் படிப்படியாகவேனும் ஏற்க வேண்டுமெனப் போராடி வருகிறார்கள். இதைக்கூட ஏற்க மறுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் பிடிவாதப் போக்கு, அவர்களை நெடிய எதிர்காலத்தில் தோன்றும் தங்கள் தலைமுறையினர், 'கேவலமான பிறவிகள்' என்று கேலி பேசுவதற்கும் நினைத்து வெட்கப்படுவதற்கும் இலக்காக்கும்.

சென்ற ஆண்டில் சிங்கப்பூரில் பிரதமராயிருந்த டேவிட் மார்ஷல் சிங்கப்பூர் சுதந்திரம் பெறுவதற்கு முதற்படியான சுயாட்சி உரிமையைப் பெறுவதற்காக இலண்டன் சென்று ஏமாற்றப்பட்டுத் திரும்பினார்; மக்களுக்குத் தந்திருந்த உறுதிமொழிப்படி, பதவியிலிருந்து விலகிக்கொண்டார்!

இப்போது புதிய பிரதமர், சிங்கப்பூர் சட்டசபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரையும் தாம் தலைமை தாங்கும் தூதுக் குழுவில் சேர்த்துக்கொண்டு இலண்டன் செல்கிறார், சுயாட்சி உரிமை கோரி!

இந்த முறையும், முன்பு போலவே பிரிட்டிஷார் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்த மறுப்பாரானால் கட்டுப்பாடான தலைமையின்கீழ் திரண்டுள்ள சிங்கப்பூர் மக்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வேறு வழிகளைத்தான் தேட முற்படுவர். அந்த விளைவுகளுக்கு முழுப் பொறுப்பும் பிரிட்டிஷாரேயாவர்.

பூரண சுதந்திரத்தை எந்த ஒரு நாட்டு மக்களும், 'வாழ்வு—பாதுகாப்பு—ஒற்றுமை', போன்ற கவர்ச்சிகரமான சொற்களுக்காகப் பண்டமாற்றுச் செய்துவிட வேண்டும் என்று கருதுபவர்கள் பைத்தியக்காரர்கள்!

'சிங்கப்பூரின் பாதுகாப்பு என்னவது?' என்ற பிரிட்டிஷாரின் கேள்வி, பைத்தியக்காரத்தனமானது என்பதைத் தவிர வேறென்ன?

'சுதந்திர' மலாயாவின் புதிய கல்வித் திட்டம்

சட்டசபையில் மசோதா நிறைவேற்றம்

கோலாலம்பூர், மார்ச். 8—

வருகிற ஆகஸ்டு மாதம் 31-ந் தேதியன்று மலாயா தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்யும் நாளன்று, கல்வித்துறையில் தான் மேற்கொள்ளப் போகிற திட்டங்கள் குறித்து மலாயா கல்வி அமைச்சரால் கொண்டுவரப்பட்ட ஒரு மசோதாவை, மலாயா மேல் சட்டசபை ஒருமனதாக வரவேற்றிருக்கிறதாம்.

நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் பொருந்தக்கூடிய—அவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு தேசிய திட்டமாகக் கல்விமுறை இருக்கவேண்டுமென்ற நோக்கமே, இந்த மசோதாவின் நோக்கம் என்று அமைச்சர் கூறியிருக்கிறாராம்.

மலாயா மொழியைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்ற கருத்துடன், தேசிய அடிப்படையில் மக்கள் அனைவருடைய விருப்பத்தை நிறைவேற்றவும், கலாச்சார, சமுதாய, பொருளாதார அபிவிருத்திகள் மேலும் அதிகரிக்கவும் வேண்டுமென்னும் நோக்கத்துடனும் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறின அமைச்சர், அதே நேரத்தில், மலாயாவில் வாழும் மலாய மொழியினரல்லாத மற்றமொழி பேசும் சிறுபான்மையினரின் மொழியும் கலாச்சாரமும் பாதுகாக்கப்படும் வகையிலும் மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டாராம்.

பெற்றோர்களின் விருப்பப்படியே பிள்ளைகள் கல்வி கற்பிக்கப்படுவராம்.

இவர்களைத் தவிர முஸ்லிம் மக்களுக்கும் அவர்களதுமொழி, கலாச்சாரத்திற்கும் தேவையான பாதுகாப்பு அதில் அடங்கியுள்ளதாகத் தெரிவித்த அவர், 'கல்வித் துறையில் முஸ்லிம் மதக் கல்விக்கு தகுந்த வசதி தரப்பட்டிருக்கிறது இந்த மசோதா மூலம்' என்றும் அறிவித்தாராம். ஒரு பள்ளியில் பதினைந்தோ அதற்கு மேலாகவோ முஸ்லிம் பிள்ளைகள் கல்வி கற்பார்களானால், அப்பள்ளி, சர்க்கார் பள்ளியாகவோ சர்க்கார் உதவிபெறும் பள்ளியாகவோ இருந்தாலும் அங்கு, முஸ்லீம் மதக்கல்வி ஒரு பாடமாகவே போதிக்கப்படும் என்றும், அதற்கான செலவுகளனைத்தையும் சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் கூறினாராம். ஆனால் முஸ்லிம் மதம் தவிர, மற்ற மதக் கல்விகளுக்கான செலவுகளனைத்தும் அந்தந்த மத நிறுவனங்களோ தனிப்பட்டவர்கள் சார்பிலோதான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாம்.

விபரீதச் செய்கையால் விளைந்த விளைவு

கான்பூர், மார்ச் 8—

கான்பூர் ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் தரவேண்டும் என ஆலைத் தொழிலாளர் ஒருவர், மில் முதலாளிகளை பலமுறை சந்தித்துக் கேட்டும் தகுந்த பலன் ஏதுமில்லாததால் இறுதியாக நேற்று மில் முதலாளியை கண்டு போனஸ் தர 15 நிமிடங்களுக்குள் இணங்காவிட்டால் தான் தற்கொலை புரிந்துக்கொள்வதாக எச்சரித்தாரென்றும், அதற்கும் ஆலை நிர்வாகிகள் ஒத்துவாராததினால் ஆலைக் கட்டிடத்தின் 2-ம் மாடியிலிருந்து தரையில் குதித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டாரென்றும் தெரிகிறது.

தொழிலாளர்கள் பிரேதத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்ற நேரத்தில் இடையில் சவத்துடன் ஆலையில் நுழைய முயற்சிக்கும் போது போலீசாரால் தடுக்கப்பட்டனரென்றும், இதன் விளைவாக போலீசாருக்கும், தொழிலாளருக்கும் சிறு கலகம் நிகழ்ந்ததென்றும், ஆலைத் தொழிலாளர்களை போலீசார் தடியடியால் கலைத்து நகரில் 144 - தடையுத்தரவை பிறப்பித்துள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

'இனத் துவேஷச் சட்டத்தைத் தகர்த்தெறிவேன்'

நிறவெறி பற்றி சுதந்திர கனா பிரதமர்

அக்ரா, மார்ச் 9—

சில நாட்களுக்கு முன் சுதந்திர நாடாக மலர்ந்த கனாவின் முதல் பிரதமரான குவாமி நக்ருமா, விரைவில் தாம் இந்தியாவுக்கு வருகைதர இருப்பதாக நம்பிக்கை தெரிவித்திருக்கிறாராம்.

மேலும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு மட்டுமல்லாமல், ரஷ்யா, சீனா போன்ற கிழக்கத்தியநாடுகளுக்கும் வர விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

முதல் முதல் சுதந்திர கனாவின் பிரதிநிதித்துவக் குழுக்கள் 5 நாடுகளில் நியமிக்கப்படுமென்றும், இவற்றுள் லண்டனிலும் புதுடில்லியிலுமாக இரண்டு 'ஹைகமிஷனர்'களும், வாஷிங்டன், பாரிஸ், லைபீரியாவிலுமாக 3 இடங்களில் தூதுக்குழுவினரும் நியமிக்கப்படுவார்களாம்.

தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக வர்த்தகத் துறையில் நடைபெறும் சட்ட மறுப்பு இயக்கங்களுக்கு கனா தனது ஆதரவைத் தருமா என்று கேட்கப்பட்ட போது, அவர், தென்னாப்பிரிக்க நாடுகளுடன் சுதந்திர கனா, தொடர்ந்து தனது வர்த்தகத் துறைத் தொடர்பை நீடித்துக் கொண்டிருக்கும் என்றும், அந்நாடுகளிலிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெறும் என்றும் கூறினதுடன், 'பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் நாங்கள் தலையிட முடியாது; நாங்கள் அத்துறையில் என்னென்ன வேண்டும் என்பது குறித்து மிக எச்சரிக்கையுடனேயே இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்' என்றும் பதிலிறுத்தாராம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக அவர், இனவெறித் துவேஷம் பற்றிய தமது கருத்தைத் தெரிவிக்கையில், தான் நினைத்தால் தென்னாப்பிரிக்காவின் இன பேதச் சட்டங்களைத் தகர்த்தெறிய முடியும் என்றும், இனப் பிரிவினைக் கொள்கை கிறித்துவ மதக் கோட்பாடுகளுக்கு உடன்பாடானதல்ல என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இங்கல்ல - பிரிட்டனில்!

இதுவரை இல்லாத அளவுக்கு, பிரிட்டனில், கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில், தொழிலாளர்கள் சராசரி வார வருமானம் 10 பவுன் 9 பென்ஸ் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இதுதான், பிரிட்டனிலுள்ள தொழிலாளர்களின் சராசரி வார வருமானம் பற்றிய புள்ளி விவரக் குறிப்பில் பத்து பவுன்களுக்கும் அதிகமாக முதல் முதல் காட்டப்படும் தொகை என்றும், 70 இலட்சம் தொழிலாளர்களுக்குத் தரப்பட்ட போனஸ், அதிக கால உழைப்பிற்கான ஊதியம், வரி, இன்ஷ்யூரன்ஸ் கொடுத்தது ஆகிய இவைகளையெல்லாம் கணக்கிட்டே மேற்படி புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

பம்பாய், மார்ச் 8—

இந்திய அரசாங்க மொழிக் குழுத் தலைவர் பி. ஜி. கெர், இன்று காலை 7-மணியளவில், புனாவில் மாரடைப்பினால் காலமானர்.

இந்தியா---கிழக்கு பாகிஸ்தான் சர்க்கார்களின் புள்ளி விவரக் கோளாறு!

புதுடில்லி, மார்ச் 7—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக இந்து அகதிகள் மாதம் ஒன்றுக்கு 32,000 பேர் என்ற எண்ணிக்கையில் ஓடிவந்துகொண்டிருக்கின்றனர் என்றபோதிலும், ஏராளமான அளவு முஸ்லீம்களும்கூட இவர்களுடனேயே இந்தியாவுக்கு அகதிகளாக ஓடிவருகின்றனராம். இப்படி வருகின்ற முஸ்லீம் அகதிகளில் மாதந்தோறும் சுமார் 4,000 முஸ்லீம்கள் இங்கேயே தங்கியும்விடுகின்றனராம்.

கடந்த வருடம் ஜனவரித் திங்கள்முதல் நவம்பர் திங்கள் வரை பாகிஸ்தான் சர்க்கார் வெளியிட்டிருக்கும் தகவல் ஒன்றின்படி, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 16,10,048 இந்துக்களும் 6,43,589 முஸ்லீம்களும் அகதிகளாக ஓடிவந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

அதே நேரத்தில், இந்தியாவை விட்டு 13,73,501 இந்துக்களும் 6,33,065 முஸ்லீம்களும் கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளனர் என்றும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆனால் இதே காலவரம்பில் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக வந்த அகதிகள் பற்றிய விவரங்கள் குறித்த இந்திய சர்க்கார் அறிக்கையில், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்த அகதி இந்துக்கள், முஸ்லீம்களின் எண்ணிக்கை முறையே 15,94,399; 5,74,518 என்றும், இந்தியாவிலிருந்து கிழக்குப் பாகிஸ்தான் சென்ற அகதி இந்து, முஸ்லீம்களின் எண்ணிக்கை முறையே 12,40,577; 5,26,338 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இந்தப் புள்ளி விவரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட போதிலும்கூட, அதையே வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட இங்கிருந்து பாகிஸ்தானுக்குப் போனவர்களைவிட அங்கிருந்து இந்தியாவிற்கு ஓடிவந்துள்ள இந்து, முஸ்லீம் அகதிகளின் எண்ணிக்கை முறையே 3,53,822; 47,780 அதிகம் என்றும், பாகிஸ்தான் சர்க்கார் குறிப்பு தரும் கணக்கையே ஏற்றுக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட பாகிஸ்தானிலிருந்துஇந்தியா ஓடிவந்த அகதிகளில் 2,36,547 இந்து அகதிகளும் 10,524 முஸ்லீம் அகதிகளும் இங்கேயே தங்கிவிட்டதும் புலனாகும் என்பதும் இங்கு கருதத்தக்கது.

ஒரே நாளில் 100 பேர் பலியாயினர்

அல்ஜீரியா, மார்ச் 8—

விடுதலை கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அல்ஜீரியத் தேசியவாதிகளில் 100 பேர்வரை நேற்று நடைபெற்ற போராட்டத்தில் பிரெஞ்சுத் துருப்புகள் கொன்று குவித்துவிட்டதாம்!

வடநாட்டு அகதிகள் மருத்துவ வசதிக்கு டில்லி தரும் உதவி

இடம் பெயர்ந்த அகதிகளுக்கு மருத்துவ வசதிக்கென இந்திய சர்க்கார் குடியமைப்பு இலாகா சில வடநாட்டு மருத்துவ மனைகளுக்கும் நிறுவனங்களுக்கும் மொத்தம் ரூ. 9,72,500 உதவித் தொகை வழங்கியிருக்கிறதாம்.

பம்பாயைச் சேர்ந்த மாகிம் என்ற பகுதியில் இதற்கென ஒரு தனி மருத்துவச்சாலை கட்டவும் அதற்கான சாதனங்கள் வாங்கவும் ரூ. 1,25,000 வழங்கப்பட்டுள்ளதாம்.

மாற்றுக் கட்சியினரை மதிக்க மறுக்கும் போக்கு

நாட்டில் சர்வாதிகார ஆட்சியை உருவாக்கிவிடும்

ஆடையில் படிந்த அழுக்கும் ஆட்சியாளரின் அலங்கோலமும் நீக்கப்பட்டாக வேண்டும்

சட்டிக் குழம்புக்குப் பிடி உப்பு போன்று ஆளும் கட்சிக்கு எதிர்க் கட்சியும் ஆகும்

ஜனநாயகம் தழைக்க வேண்டிய அவசியம் குறித்து அண்ணா தரும் கருத்து விளக்கம்

சென்னை, மார்ச் 9—

நேற்று இரவு வ. ஆ. மாவட்டம் குடியேற்றம் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அண்ணா அவர்கள் ஆற்றியசொற்பொழிவின் சாற்கம் இங்கு தரப்படுகிறது :—

"நாங்கள் தேர்தலில் ஈடுபட்டது, எங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல! தி. மு. கழகம் தேர்தலுக்காகத் துவக்கப்பட்ட இயக்கமல்ல! தேர்தலுக்குப் பிறகு, மக்கள் மன்றத்திலே கடந்த எட்டு ஆண்டுகள் இடம் பெற்றதைப் போல தொடர்ந்து பணியாற்றும்;

"இந்த காங்கிரஸ் ஆட்சி, கடந்த 10 ஆண்டு காலமாக யாரும் தட்டிக் கேட்க முடியாதவாறு நீடித்து வருகிறது. மக்கள் கண்டதெல்லாம் வாட்டம், வேதனை, அடக்குமுறை இதற்கு முக்கிய காரணம் ஆளும் கட்சியாக உள்ள காங்கிரஸ் எதிர்க் கட்சிகளை ஏசியும், கேலி செய்தும், திரித்தும், பழித்தும் பேசுகின்ற அரசியல் போக்குதான். 'தி. மு. கழகமா? — அவர்களிடம் நல்ல திட்டங்கள் இல்லை; கம்யூனிஸ்டா?-இவர்கள் மாஸ்கோ கூலிகள்; சோஷலிஸ்டா? — இவர்கள் வேகாததைத் தின்று வாந்தி எடுப்பவர்கள்' என்று இப்படி எல்லா எதிர்க் கட்சிகளையும் குறைத்துப் பேசிவிட்டு, எல்லா ஆற்றலும், திறமையும் காங்கிரசுக்குத்தான் இருக்கிறது என்று மக்களிடம் பெருமை பேசுகிறார்கள். இந்தப் போக்கு மேலும் நீடித்தால், செர்மனியிலே, இத்தாலியிலே மற்ற மற்ற நாடுகளிலே தலைவிரித்தாடிய சர்வாதிகார ஆட்சியாகத்தான் தமிழக ஆட்சியும் உருவாக முடியும். இதைத் தடுக்கவே நாங்கள் தேர்தலில் ஈடுபட்டோம்.

"காங்கிரஸ் ஒன்றுதான் திறமை வாய்ந்தது—ஆளும் ஆற்றல் பெற்றது — எல்லா தகுதி அம்சங்களும் கொண்டது என்றால், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்துவானேன்? இந்தத் தேர்தலை நடத்த வாக்குப் பெட்டிகள் தயாரிக்கவும், வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கவும், வாக்குப் பதிவு நிலையங்கள் அமைக்கவும், பந்தோபஸ்து ஏற்பாட்டிற்கும் மற்ற மற்றச் செலவுகளுக்கும் ரூ. 10 கோடி செலவு செய்வானேன்? பொது மக்களின் நேரத்தையும் வரிப் பணத்தையும் பாழாக்குவானேன்?

"அழுக்கு படிந்த துணியை வெளுப்பதுபோல, ஆட்சியின் அலங்கோலத்தையும் மாற்றச் செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பு மக்களிடம் இருக்கிறது. இதைப் பற்றி மக்கள் அலட்சியமாக இருந்து விடக் கூடாது.

"மக்களிடம், உண்மைகளை விளக்கி, ஆட்சியாளரின் அவலட்சணங்களை எடுத்துரைத்து, மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கு தேர்தல் ஒரு நல்ல வாய்ப்பாகும்.

"தேர்தல் சமயத்தில், தெருத் தெருவாகச் சென்று கீரை விற்றுப் பிழைக்கும் கிழவிக்குக் கூடக் கொஞ்சம் அரசியல் விழிப்பு காணப்படும். அதற்குக் காரணம், நாட்டில் பல்வேறு கட்சிகள் பல்லாயிரக்கணக்கான கூட்டங்களைக் கூட்டி, பல விஷயங்களை எடுத்துச் சொல்வதுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதைவிட்டு என்னைப் பார்த்து, 'நீ என்ன செய்தாய்?' என்று கேட்டால், நான் என்ன சொல்வேன்?—'என்னிடமா வரி தந்தீர்? நானா பதவியில் இருந்தேன்? நானா ஆட்சி செய்கிறேன்?'—என்றுதான் திருப்பிக் கேட்பேன். எனவே, ஆளும் கட்சியைப் பார்த்துக் கேளுங்கள்.

"சாதாரணமாக வீட்டில் தாய்மார்கள் சுவற்றின் ஒரு பகுதியிலே எழுதி வைத்துள்ள கணக்கைப் பார்த்து சேலைகள் எத்தனை, ஜாக்கெட்டுகள் எத்தனை, பாடிகள் எத்தனை என்று கணக்குப் பார்த்துதான் வெளுத்தவன் பணம் கேட்கும்போது கொடுப்பார்கள். கணக்கில் ஒரு கைக்குட்டை குறைந்தாலும், 'அதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் பணம் வாங்கிக்கொள்,' என்று கடுமையாகக் கூறுவார்கள். சாதாரணமாக வீடுகளிலேயே கூட அப்படியிருக்க, ஓட்டுக் கேட்கும் ஆளும் கட்சியைமட்டும் ஏன் கணக்குக் கேட்கக்கூடாது?

இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாட்டிற்கு மிகவும் அவசியமானது நல்லதோர் எதிர்க்கட்சி என்று பல பேரறிஞர்கள் கூறியுள்ளார்கள். எதிர்க்கட்சிக்கு எண்ணிக்கை அவ்வளவு பெரிதல்ல; ஆட்சியாளரின் வலை வீச்சுக்கு இரையாகாமல், ஆசைக்கு அச்சம் தட்டாமல், 'லைசன்சு பர்மிட்' தேடி மற்றதை மறக்காமல், மிரட்டல்களைக் கண்டு அஞ்சாது, அடக்குமுறைகளைத் தாங்கிக்கொள்ளக்கூடிய பண்பும் ஆற்றலும் பழக்கமும் பெற்ற ஒரு சிலர்மட்டும் இருந்தால் போதும்.

"சமையல் செய்யும்போது, குழம்பு கூட்டுவர் தாய்மார்கள் அப்போது உற்றுக் கவனியுங்கள்! கூட்டினது— ஒரு சட்டிக் குழம்பு; அதற்கு ஒரு பிடி உப்பு சேர்ப்பார்கள்; 'ஏன் ஒரு பிடி உப்பு?— சட்டிக் குழம்பு போதாதா?' என்றால், அந்தக் குழம்பு யாருக்கும் பயன்படாது —யாரும் அதனைச் சாப்பிடவும் மாட்டார்கள். அப்படி உப்பில்லாத குழம்பு சாப்பிடுபவர்கள் உண்டானால் அவர்கள் நாக்கே இல்லாதவர் என்றுதான் நினைக்கத் தோன்றும்.

"எதற்காகச் சொன்னேனென்றால், எப்படி ஒரு சட்டிக் குழம்புக்கு ஒரு பிடி உப்பு தேவையோ, அப்படித்தான் ஒரு ஆட்சிக்கு ஒரு எதிர்க்கட்சியும் தேவை. ஆகவேதான் சட்டசபையில் நல்ல எதிர்க்கட்சி அமைந்து, சனநாயக ஆட்சியும் புதிய பொலிவும் நல்வாழ்வும் ஏற்பட திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபட்டது."

புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன்

புயல் வேகப் பிரச்சார விவரம்

தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரத்திற்காக என்று, நமது புரட்சி நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களுடன் கடந்த 3 வாரங்களாகத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்து, தி. மு. கழகத்தின் சிறந்த கொள்கை கோட்பாடுகளையும் தேர்தல் ஈடுபாட்டையும் விளககி, இத்தேர்தலில் மக்கள் கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கோண்டு பிரச்சாரம் செய்துள்ளார். அவரது சுற்றுப் பயணத்தின் முன்னைய விவரங்கள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன; எஞ்சிய விவரங்கள் இங்கு தரப்படுகின்றன :—

சிதம்பரம்:

6—3—57 மாலை 5½ மணிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும் சிதம்பரம்வந்து, சிறப்புக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். தோழர் பொன். சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், அ. பொன்னம்பலனார், ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சிதம்பரம் சிறப்புக்கூட்டத்தை முடித்துக்கொண்டு தோழர் எம். ஜி. ஆர். அவர்கள், அ. பொன்னம்பலனார் அவர்களுடன், மாலை 6½ மணிக்கு செவ்வாயம் வரவேற்பிலும் 6-45 மணிக்கு குமாராட்சி பொதுக்கூட்டத்திலும், இரவு 7 மணிக்கு லால்பேட்டை பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டு காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் பட்ட தொல்லைகளையும் துயரங்களையும் எடுத்துக் காட்டி, மக்கள் துயர் துடைக்கப் பாடுபடும் தி. மு. கழகத்திற்கு ஆதரவு தந்து வெற்றி தேடித் தருமாறு கேட்டுக்கொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

விருத்தாசலம்:

இரவு 9-15 மணிக்கு விருத்தாசலம் ஆற்று மணற் பரப்பில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி ஆர். ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அ. பொன்னம்பலனார் ஆகியோர் கலந்துகொண்டு காங்கிரசாரின் பத்தாண்டுக் கால ஆட்சியில் எப்படியெப்படி ஜனநாயகம் கொலை செய்யப்பட்டது என்பதை எடுத்துக் கூறி, நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றி நிலைநாட்ட தி. மு. கழகத்திற்கு மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டு அரிய கருத்து விளக்கம் தந்தனர்.

ஆத்தூர்:

அன்று இரவு 11½ மணிக்கு சேலம் மாவட்டம் ஆத்தூர் வந்து சேர்ந்தனர். ஆத்தூரில் தோழர் எம். குப்புசாமி தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் அண்ணா அவர்களும் கலந்துகொண்டு தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் கழக அபேட்சகர்களுக்கு ஆதரவுதருமாறுகேட்டுக்கொண்டு நீண்டதோர் உரை நிகழ்த்தினர். மற்றும் தோழர்கள் எம். ஜி. ஆர்., எம். பி. சுப்பிரமணியம், அ. பொன்னம்பலனார் ஆகியோரும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

சின்னசேலம்:

சின்ன சேலத்தில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதாவு தந்து வெற்றியுறச் செய்தால், தி. மு. கழகம் சட்டசபையில் நல்லதோர் எதிர்க்கட்சியாக அமர்ந்து சர்க்காரின் சர்வாதிகாரப் போக்கை மாற்றி, ஓரளவுக்கு மக்கள் குரலை மதிக்கும்படி செய்யும் என்று எடுத்துக் கூறினார்.

கள்ளக்குறிச்சி:

இரவு நெடுநேரம் கழித்து கள்ளக்குறிச்சி கூட்டம் நடைபெற்றும்கூட, மக்கள் அமைதியாக இருந்தனர். இறுதியில் வெகுநேரம் ஆகிவிட்டதால், தோழர் எம். ஜி. ஆர். அவர்கள், தாம் மீண்டும் ஒரு முறை அவ்வூர்வந்து கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசுவதாகவும், வருகிற தேர்தலில் மக்கள் கழகத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டதும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

கரூர் தொகுதியில்:

7—3—57 மாலை 6½ மணிக்கு, கரூர் தொகுதியைச் சேர்ந்த பஞ்சமாதேவி, கோயம்பள்ளி, சேமூர், நெரூர், வாங்கல், செந்திப்பாளையம், நன்னியூர், புதூர், கடம்பக்குறிச்சி, வாங்கல்பாளையம், வெங்கமேடு, புலியூர் ஆகிய கிராமங்களில் தரப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் பொதுக் கூட்டங்களிலும் எம்.ஜி. இராமச்சந்திரன் கலந்து கொண்டு கழகக் கொடிகளை ஏற்றிவைத்து கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

திருச்சியில்:

7—3—57 இரவு 1½ மணிக்கு தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களுடன் திருச்சி வந்தார்.

8-3-57 மாலை 4 மணிக்கு ரங்கவாத்திலும் 6 மணிக்கு குளித்தலையிலும் 8 மணிக்கு மாயனூரிலும் 9 மணிக்கு வெள்ளியணையிலும் 10-மணிக்கு கரூரிலும் நடைபெற்றப் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

காஷ்மீரில் ஐ. நா. தூதுவரின் அலுவல்

இந்தியா சிரமமாக்கிவிட்டதாம்!

நியூயார்க், மார்ச் 9—

தங்களுடைய எதிர்காலத்தை காஷ்மீர் மக்கள் முடிவு செய்துவிட்டார்களென்று இந்தியா கூறிவிட்டால், அதனால் ஐ. நா. தூதர் ஜாரிங்கின் அலுவல்கள் சுலபமாகிவிடாதாம்!

காஷ்மீரில் இப்பொழுது தேர்தல் நடத்தி, ஐ. நா. தூதுவரின் அலுவலை இந்தியா சிரமமாக்கிவிட்டதாம்!

இவ்வாறெல்லாம் 'நியூயார்க் டைம்ஸ்' என்ற இதழ் எழுதியிருக்கிறது.

அயர்லாந்து பிரதமராக!

அயர்லாந்தில் நடைபெற்றத் தேர்தல்களில் மீண்டும் டிவேலராவும், அவரது கட்சியினரும் பெரும்பான்மையினராக வெற்றி பெற்றிருக்கின்றனர்.

கடந்த 1954-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் டிவேலரா தோற்றுப் போனார்; இப்போது வெற்றி பெற்றிருக்கிறார்.

இந்தத் தேர்தலின்போது, டிவேலரா கட்சிக்கு எதிரான கொள்கையுடைய — அதாவது அயர்லாந்து பிரிவினையை எதிர்க்கிற கட்சிக்காரர்கள் 19 இடங்களுக்குப் போட்டியிட்டு 4 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளனர். டிவேலராதான் அயர்லாந்தின் பிரதமராக 20 ஆண்டுகள் இருந்துவந்தார். சென்ற தேர்தலில்அவர் தோற்றார்.

தமிழக தேர்தல் முடிவுகள்

தில்லுமுல்லுகள் செய்து திருடும் 'குபேரர் கட்சி'க்கு வெற்றிகள்

கழக அபேட்சகர்கள் பெற்ற வாக்குகள் விபரம்

மார்ச் 4, 6 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் சில இடங்களிலிருந்து கிடைத்துள்ளன.

பாராளுமன்றம்

கிருஷ்ணகிரி பாராளுமன்றத் தொகுதித் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டுவிட்டது. சுயேச்சையாகப் போட்டியிட்ட ஜி. டி. நாயுடுவையும், கழக அபேட்சகர் தோழர் இரா. ஜெகநாதனையும் விட அதிகமான வாக்குகள் அதிகம் பெற்று, காங்கிரஸ் அபேட்சகர் சி. ஆர். நரசிம்மன் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நீலகிரிதொகுதியில், காங்கிரஸ் அபேட்சகரான சி. நஞ்சப்பா என்பார், எதிர்த்துப் போட்டியிட்ட இரு சுயேச்சை அபேட்சகர்களையும்விட அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

சட்டசபை

வ. ஆ. மாவட்டம் வாணியம்பாடியில் கழகச் சார்பில் போட்டியிட்ட தோழர் முல்லை-வடிவேலு அவர்களைவிட சுமார் 4,600 வாக்குகள் மட்டும் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகரான ரஷீத் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. தோழர் முல்லை-வடிவேலு 13,930; காங்கிரஸ் அபேட்சகர் 18,565 வாக்குகள் பெற்றிருக்கின்றனர்.

தேனி தொகுதியிலும் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களைவிட சுமார் 6,000 வாக்குகள் அதிகம் பெற்று, போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றும் தோழர் எஸ். எஸ். இராசேந்திரனுக்கு 31,404 வாக்குகளும்; காங்கிரஸ் அபேட்சகருக்கு 38,185 வாக்குகளும் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் தஞ்சையில் தோழர் பெத்தண்ணன், கந்தர்வக்கோட்டையில் தங்கமுத்து, தாராமங்கலத்தில் சின்னப்பன், ஆத்தூர் (மதுரை) வி. எஸ். எஸ். மணி, கும்பகோணம் கே. கே. நீலமேகம் ஆகியோரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றிபெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடமதுரை தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் டி. வி. திருவேங்கடசாமி அவர்கள் சுமார் 1,700 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

திருச்சி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரை விட சுயேச்சையாகப் போட்டியிட்ட டாக்டர் மதுரம் அவர்கள் சுமார் 2,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

மற்றும் சூலூர், கும்மிடிபூண்டி,

(4-ம் பக்கம் பார்க்க)

கழகத் தோழர்களை வெறிகொண்டு தாக்கிய காங்கிரஸ் கூலிகள்

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் அட்டகாசம்

தாக்கப்பட்ட தோழர்கள் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் உள்ளார்

ஸ்ரீபெரும்புதூர், மார்ச் 8—

செங்கற்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி தேர்தல் முடிவுகள், கடந்த 6-ந் தேதியன்று அறிவிக்கப்பட்டு முடிந்ததும், ஸ்ரீபெரும்புதூரை அடுத்த பிள்ளைபாக்கம் எனும் கிராமத்தைச் சேர்ந்த சில கழகத் தோழர்கள் தங்கள் ஊருக்குச்சென்று கொண்டிருந்த போது, அத்தொகுதி காங்கிரஸ் அபேட்சகரான அமைச்சர் பக்தவத்சலம் அவர்களுக்காகக் கீழ்த்தரமான முறையிலெல்லாம் பாடுபட்டு, தோழர் சி. வி. எம். அண்ணாமலைக்கு மறைமுகமாகத் தொல்லைகள் கொடுத்துவந்த காதர்சாயபு என்பவர், தம்முடனிருந்த மற்ற சில காலிகளை ஏவி கழகத் தோழர்களைத் தாக்குமாறு தூண்டியிருக்கிறார். இத்தாக்குதலின் விளைவாக, தம்பிரான், துரைசாமி, கிலிகிலி, சுப்பை, குள்ளன், சடகோபன், ஆகிய தோழர்கள் படுகாயப்பட்டிருக்கின்றனர். கம்புகளாலும் சவாக்கத்தியாலும் தோழர்கள் தாக்கப்பட்டனர்.

தம்பிரான் என்ற தோழரது வலதுபுஜத் தசை சரிந்துவிட்டதுடன், மற்றும் உடம்பில் 7 இடங்களில் கத்திக்குத்து காயங்களுடன் செங்கற்பட்டில் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரது நிலைமை கவலைக்கிடமாகவே இருக்கிறது. மற்றத் தோழர்கள் அனைவரும் உள்ளூர் மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து மாவட்டப் போலீஸ் அதிகாரி சம்பவ இடத்திற்கு வந்து நிலைமைகளைக் கண்டறிந்து, எதிரிகளில் மூன்றுபேரைக் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றார்.

தமிழகத் தேர்தல் பற்றிய விவரம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேடசெந்தூர், சோளிங்கர் ஆகிய தொகுதிகளிலும் காங்கிரசே வெற்றி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காங்கேயம் தொகுதியில் கழகச் சார்பில் போட்டியிட்ட தோழர் பி. முத்துசாமி அவர்களைவிட சுமார் 7,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருக்கிறார். தோழர் முத்துசாமிக்கு 10,209 வாக்குகளும் காங்கிரஸ் அபேட்சகருக்கு 17,952 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

இராசிபுரம் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அபேட்சகர் நமது கழக அபேட்சகரைவிட சுமார் 3,000 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று வெற்றிபெற்றிருக்கிறார். காங்கிரஸ் அபேட்சகருக்கு 20,983 வாக்குகளும் கழக அபேட்சகருக்கு 17,545 வாக்குகளும் கிடைத்துள்ளன.

டி. பழூர் தொகுதியில் கழக அபேட்சகராகப் போட்டியிட்ட இராமசாமி அவர்களைவிட காங்கிரஸ் அபேட்சகர் 2,000 வாக்குகளுக்கும் குறைவாகவே அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார். காங்கிரஸ் அபேட்சகருக்கு 17,522 வாக்குகளும் கழக அபேட்சகருக்கு 15,602 வாக்குகளும் கிடைத்துள்ளன.

வாணியம்பாடி தொகுதியில் கழக அபேட்சகர் தோழர் எம். பி. வடிவேலு அவர்களைவிட சுமார் 4,000 வாக்குகளுக்கு அதிகம்பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றார்.

மற்றும் ஸ்ரீவைகுண்டம், கூனூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், (இரட்டைத் தொகுதி), பெண்ணாகரம், திண்டுக்கல், சேலம் 2. சங்கரன்கோயில் (இரட்டைத் தொகுதி), தர்மபுரி, உதகமண்டலம், பவானி (பொது) ஆகிய தொகுதிகளில் கழக அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

திருச்சி (2) தொகுதியில் போட்டியிட்ட கம்யூனிஸ்டுத் தோழர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 3,000 வாக்குகளுக்கும் அதிகமாகப் பெற்று வெற்றியடைந்துள்ளார்.

அதிராம்பட்டினம் தொகுதியில் பி. சோ. கட்சி உறுப்பினர் தோழர் மாரிமுத்து அவர்கள், காங்கிரஸ் அபேட்சகர் சுந்தரேசதேவரைவிட சுமார் 7,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

ஆலங்குளம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரைவிட 4,000 வாக்குகள் அதிகம்பெற்று சுயேச்சை அபேட்சகர் வி. வேலுசாமி தேவர் வெற்றிபெற்றிருக்கிறார்.

கழக அபேட்சகர்கள் போட்டியிடாத மற்ற சில இடங்களிலும் காங்கிரஸ் அபேட்சகர் சில ஆயிரம் ஓட்டுகள் மட்டும் அதிகம் பெற்று வெற்றிபெற்றிருக்கின்றனர்.

மேட்டுப்பாளையம் தொகுதியில் சுயேச்சை அபேட்சகர் ஒருவரைவிட சுமார் 1,300 வாக்குகள் மட்டுமே அதிகம்பெற்று காங்கிரஸ் அபேட்சகர் திருமதி ரகுபதிதேவி வெற்றிபெற்றிருக்கிறார்.

முதுகளத்தூர் இரட்டைத் தொகுதியில் பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் போட்டியிட்ட முத்துராமலிங்கத்தேவர், ஏ. பெருமாள் ஆகிய இருவரும் காங்கிரஸ் அபேட்சகர்களைவிட அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

உத்திரமேரூர் தொகுதியில் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் தோழர் வி. கே. இராமசாமி அவர்கள் சுமார் 1,200 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்தார்.

தோழர் வி. கே. இராமசாமிக்கு 18,385 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 17,122 வாக்குகளும் கிடைத்தன.

செஞ்சித் தொகுதியில் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் தோழர் எம். செங்கால் ரெட்டி அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 8,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

செங்கம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் சுமார் 7,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அறிஞசி தொகுதியிலும் சுயேச்சை அபேட்சரைவிட சுமார் 7,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருக்கிறார்.

மற்றும் நாங்குனேரி, ஸ்ரீரங்கம், வீரபாண்டி, திருவள்ளூர் (இரட்டைத் தொகுதி) ஆகிய தொகுதிகளிலும் காங்கிரசார் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மைசூர் சட்டசபைக்கு பிராட்வே தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்ட தோழர் நாகராசன் அவர்களைவிட சுமார் 7,000 வாக்குகளுக்கு அதிகமாகப் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருக்கிறார்.

எனது நன்றி

நேற்று முன்தினம் நடைபெற்ற தென்சென்னை பாராளுமன்றத் தொகுதியில், தி. மு. கழக அபேட்சகனுகப் போட்டியிட்ட எனக்கு, முழுமுச்சுடன் தன்னலம் கருதாமலும் சகலவித சிரமங்களையும் பார்க்காமல் திடமனதுடனும் இன்னல்களையும் இடையூறுகளையும் ஏற்றுச் சூறுவளியெனச் சுழன்றுசுழன்று பணியாற்றிய நமது கழகத் தோழர்கட்கும் அனுதாபிகட்கும் ஆதரவாளர்கட்கும் பொதுமக்களுக்கும் எனது இதயங்கனிந்த —உளப்பூர்வமான நன்றியறிதலை இதன்மூலம் தெரிவித்துக் கோள்கிறேன்.

என்னை எதிர்த்துப் போட்டியிட்ட மற்ற இரு அபேட்சகர்களும் நடத்திய துஷ்பிரச்சாரங்களையும், மற்ற பிற இழிசெயல்களையும் பெரும் ஆர்ப்பாட்டங்களையும், காட்டிய பண ஆசையையும் பொருட்படுத்தாமல் எனக்கு 71,284 வாக்குகள் அளித்து எனக்கும் கழகத்திற்கும் பெருமைத் தேடித்தந்த தென்சென்னைத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்!

அன்பன்,
பி. பாலசுப்பிரமணியம்
சென்னை : 11—3—57

எதிர்க் கட்சிகளின் பலத்தைக் குறைக்கச் செய்ய சதியா?

ஓட்டுகளை எண்ணுவதில் தாமதம் ஏன்?

கல்கத்தா, மார்ச் 11—

"வாக்குப் பதிவு நடைபெற்று 20 நாட்களுக்குப் பின்னரே மே. வங்கத்தில் பதிவான வாக்குகளை எண்ணுகின்றனர்; இந்தக் காலதாமதம் ஏன் என்று தெரியவில்லை. ஒருக்கால் எதிர்க்கட்சிகளின் பலத்தைக் குறைக்கச் செய்யும் சதி திட்டமாக இது இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் எழுகிறது" என்று, அஜாய் கோஷ் கண்டித்துள்ளார்.

ஒரிசா துணை மந்திரி தோல்வியுற்றார்!

ஒரிசா சட்டசபைத் தொகுதி ஒன்றில் போட்டியிட்ட துணை மந்திரி கிருபாநிதி நாயக் என்பவர் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

காஷ்மீரைக் காட்டி ஓட்டுக் கேட்கும் காங்கிரஸ் தலைவர்கள் போக்கு

ஆச்சார்ய கிருபளானி கண்டனம்

அமிர்தசரஸ், மார்ச் 10—

"காஷ்மீர் பிரச்சினையின் மீது காங்கிரசுத் தலைவர்கள் ஓட்டுக் கேட்பது மக்களை கோழைகளாக்கிவிடுகிறது. காஷ்மீரை பாகிஸ்தான் தாக்கினால், காஷ்மீரை காக்க ஒவ்வோர் இந்தியனும் முனைவான். இது தேசியப் பிரச்சினை; இதை கட்சிப் பிரச்சினையாகக் காங்கிரசார் பிரச்சாரம் செய்யக் கூடாது!"— என்று, பிரஜா சோஷலிஸ்டு தலைவர் ஆச்சார்ய ஜே. பி. கிருபளானி, ஓர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது :

"சுயராஜ்யம் எப்படி இருக்க வேண்டுமென்று காந்தியடிகள் கனவு கண்டாரோ அந்நிலையை உருவாக்குவதில் காங்கிரசு பத்து ஆண்டுக்கால ஆட்சியில் வெற்றி பெற்றதா என்பதை பொதுமக்கள் சிந்திக்க வேண்டும். 'சுதந்திரம் பெறுவதற்குமுன் எந்த சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து காங்கிரசு போராடியதோ அந்தச் சர்வாதிகாரத்திற்கு இன்று முடிவுகட்டிவிட்டதா? உயர்ந்த ஊதியம் பெறும் அதிகாரிகளுடன் நடத்தப்படும் நிர்வாகச் செலவுக்கு ஒரு முடிவு கட்டப்பட்டதா?' என்பதைப் பற்றியெல்லாம் மக்கள் யோசிக்க வேண்டும். உணவும், உடையும், இருப்பிடமும் முன்பிருந்ததைவிட வசதிப்படி கிடைக்கிறதா என்பதையும் மக்கள் சிந்திக்க வேண்டும்.

பி.பாலசுப்பிரமணியம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்ச்சி என்றும் அந்தத் தோழர் கூறினார்!

திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகரான திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், அதிகார பலம்—பண பலம் மிகப்படைத்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரையும், எல்லா அகில இந்தியக் கட்சிகளின் தாங்குதலோடு நின்ற எச். டி. ராஜாவையும் எதிர்த்து நின்று 71,284 வாக்குகள் பெற்றிருக்கிறார் என்பது, தி. மு. கழகத்திற்கு பெருமை தரக்கூடியதாகும்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் எச். டி. ராஜாவும் போட்டி போட்டுக்கொண்டு இலட்சக்கணக்கான ரூபாய்களை சென்னை நகர வீதிகளில் வாரி இறைத்திருந்தனர் என்பதை நகர மக்கள் அறிவர்.

அப்படியிருந்தும், வெறுங்கையோடு தேர்தலில் ஈடுபட்ட பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் 71,284 வாக்குகள் பெற்றார் என்பது பெருமைக்குரியதல்ல என்று எவரால் கூறமுடியும்?

★

சி. பி. சிற்றரசு

42,875 வாக்குகள் பெற்றார்

வ. ஆ. மாவட்டம் திருப்பத்தூர் பாராளுமன்றத் தொகுதியில் தி. மு.கழக அபேட்சகராகப் போட்டியிட்ட தோழர் சி. பி, சிற்றரசு அவர்களைவிட 30,000-த்திற்கும் குறைவான வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களுக்கு 42,875 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 71,564 வாக்குகளும்கிடைத்திருக்கின்றன.

கழகம் போட்டியிடாத மற்றும் மூன்று பாராளுமன்றத் தொகுதிகளில் ஒரு தொகுதியில் காங்ரஸ் தோல்வி கண்டிருக்கிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் பாராளுமன்றத் தனித்தொகுதிக்கு பார்வர்ட் பிளாக் அபேட்சகராகப் போட்டியிட்ட முத்துராமலிங்கத் தேவர் சுமார் 40,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகரைத் தோல்வியுறச் செய்திருக்கிறார்.

ஆனால், ஸ்ரீ வில்லிபுத்தூர் பாராளுமன்றத் தனித் தொகுதியில் சுமார் 20,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர், பார்வர்ட் பிளாக் அபேட்சகரைத் தோற்கடித்திருக்கிறார்.

சேலம் பாராளுமன்றத் தொகுதியில் கழக ஆதரவுபெற்ற சுயேச்சை அபேட்சகர் கணேசசங்கரைவிட அதிகமான வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இராஜஸ்தானில் அமைச்சர்கள் தோல்வி

ஜெய்ப்பூர், மார்ச் 11—

இராஜஸ்தான் மாநில உணவு மந்திரி ஜோஷி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகரிடம் தோல்வியுற்றுவிட்டார்.

மேலும், துணை மந்திரி ஷா அலிமுத்தின் என்பார், சட்டசபைத் தேர்தலில் தன்னை எதிர்த்து நின்ற அபேட்சகரிடம் தோல்வியுற்றார்; 1,500 வாக்குள் வித்தியாசத்தில் அமைச்சர் வீழ்த்தப்பட்டிருக்கிறார்.

துணைத் திட்ட மந்திரி தோல்வியுற்றார்!

லக்னோ, மார்ச் 11—

உத்திரப் பிரதேசத்தின் துணைத் திட்ட மந்திரி பூல்சிங் என்பார், சகரன்பூர் மாவட்ட சட்டசபைத் தொகுதி ஒன்றில் போட்டியிட்டு தோல்வியுற்றிருக்கிறார்.

எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகர் யேஷ்பால் சிங் என்பார் 10,000 வாக்குகள் அதிகம் பெற்று அமைச்சரை வீழ்த்தியிருக்கிறார்.

'நிர்வாகத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டனர்'

தென்பகுதி இரயில்வே தொழிலாளர்கள் அதிருப்பு

திருவாரூர்—

"இரயில்வே ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்த இரயில்வே மந்திரியின் அறிக்கையினால் சுமார் 30,000 பேர்களே சிறிதளவுக்கு நலன் பெற முடியும்; இரயில்வே நிர்வாகத்திற்கு முதுகெலும்பு போன்ற 60 சதவிகிதம் தொழிலாளர்கள் அறவே புறக்கணிக்கப்பட்டுள்ளனர்," என்று, இங்கு நடைபெற்ற தென்பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேருததால்!

ஐதராபாத், மார்ச் 11—

பம்பாய் துறைமுகத்திலிருந்து கல்கத்தா துறைமுகம்வரையில் கடலோரமாக உள்ள துறைமுகங்களுடன் தோணி மூலம் சரக்கு ஏற்றிச் செல்வதற்குத் தொடர்பு ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாம்.

இந்தத் திட்டத்தைத் துவக்கத்தில் ஆந்திர அரசு உருவாக்கியது. இந்தத் திட்டத்தை அமுல் செய்வதை சிறிது காலத்திற்குத் தள்ளிப்போட வேண்டுமென்று சென்னை அரசாங்கம் விரும்பியிருக்கிறதாம்; இதற்கு முக்கிய காரணம், சென்னை சேது சமுத்திரத் திட்டம் நிறைவேருததே என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.